Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 17-1-1994

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 04 (17-01-1994) திங்கட்கிழமை ஓசை 333

## பல்கலை அனுமதிக்கு தகுதியுள்ள மாணவருக்கு ஆசிரியர் நியமனம்

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு தகுதியான மாணவர்களுக்கு மிகவிரைவில் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு தகுதி பெற்றவர்கள் மேற்படி ஆசிரிய நியமனத்துக்காக இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 2000 பேருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இவர்கள் கணித, விஞ்ஞான மற்றும் ஆங்கில ஆசிரியர்களாகவும், ஆரம்ப ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

# இந்திய ராணுவத்தை மீண்டும் அழைக்கும் சிறிலங்கா அரசின் முயற்சி தோல்வி

## இந்தியா விரும்பவில்லையாம்

(கொழும்பு)

இந்திய இராணுவத்தை மீண்டும் இலங்கைக்கு அழைக்க சிறிலங்கா அரசாங்கம் எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள சண்டேரைம்ஸ் பத்திரிகை, சிறிலங்கா–இந்தியா கூட்டு ஆணைக்குழு கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் ஹமீத் இக் கோரிக்கையை கூற திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் இந்தியா அதை விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தகவல் வெளியிட்ட அப்பத்திரிகை இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் எடுக்கக் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை ஒன்றின் மூலம், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இந்தியாவை வெளிவிவகார அமைச்சு கோருவதென முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இக்கோரிக்கையானது சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஏ சி. எஸ். ஹமீத் சிறிலங்கா - இந்தியா கூட்டு ஆணைக்குழு கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக டில்லி செல்லும் போது கோருவதாக இருந்தது; ஆனால், இக் கூட்டுக் குழுவின் இவ்வருடக் கூட்டம் தற்பொழுது பிற்போடப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தளபதி கிட்டுவின் நினைவு நாள் தமிழீழம் எங்கும் நேற்று அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

இந்திய சதி நாசகாரச் செயலினால் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகள் போராளிகளின் நினைவுநாள் நேற்று தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளினதும் நினைவாக உருவப்பட திறப்பு விழாக்கள், நினைவுச் சின்னம் திறப்பு விழாக்கள் என்பனவற்றுடன் அஞ்சலிக் கூட்டங்கள், அஞ்சலி நிகழ்வுகள் என்பன நேற்று யாழ் குடாநாடெங்கும் இடம்பெற்றன.

யாழ்குடாநாட்டின் கேந்திர நிலையங்கள், சந்திகள் தோறும் பந்தல்கள் அமைக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டு கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளினதும் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்ததுடன் தீபங்களும் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன பலஇடங்களில் கேணல் கிட்டுவின் பெரிய அளவிலான உருவப் படங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்உருவப்படங்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

மேலும் வீதிகள், சந்திகள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ராணுவத்தை அழைப்பதுபற்றி ஹமீத் டில்லியில் பேசமாட்டார்

### பத்திரிகைச் செய்திக்கு அரசு மறுப்பு

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் ஏ. சி.எஸ். ஹமீத் இம்மாதம்இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் போது இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அழைப்பது

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்ய வடபகுதியில் நடவடிக்கை மேற்கொள்ள இந்திய அமைதிப்படையை அழைக்கும் சாத்தியம்குறித்து அமைச்சர் ஹமீத் பேசுவார்

யிட்டிருந்தன. இது எவ்வித ஆதாரமும் அற்றது மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் செய்திகள் என வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் ஹமீத் இந்திய-

## கிட்டுவால் தமிழீழப் போராட்டம் உலகில் உன்னத நிலை அடைந்தது

### அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன்

எமது விடுதலைப் போரா ... கொண்டு கேணல் கிட்டு ... ஆனால் அவரை இந்திய ...

யை இலங்கைக்கு அழைப்பது குறித்து இந்திய தலைவர்களுடன்பேசுவார்எனகொழும்புப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

அமைச்சர் ஹமீத் பேசுவார் எனவும் இது தொடர்பாக அவர் பின்னர் ஐ. நா. அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவார் எனவும் கொழும்புபத்திரிகைகள்செய்திவெளி

அமைச்சர் ஹமீத் இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழு கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக இந்தியா செல்லவிருந்தார். கூட்டு ஆணைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

எமது விடுதலைப் போராட்டத்தை அனைத்துலக ரீதியாக ஒருமிசஉயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் கேணல் கிட்டு. இவர் இன்று அனைத்துலகமும் அதிசயிக்கின்ற ஒரு மிகப்பெரிய தியாகத்தைச் செய்திருக்கின்றார்.

இவ்வாறு நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்தார்,

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்;

வெளிநாடுகளிலே இருந்து கொண்டு கேணல் கிட்டு அவர்கள் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எமது மக்களுடைய நிரந்தரமான ஒரு சமாதான வாழ்விற்கு வழிதேட முயன்றார்.

உலக நாடுகளிலே உள்ள சமாதான அமைப்புகளுடன் தொடர்புகொண்டு இந்த தமிழீழத்திலே யுத்தத்திற்கு முடிவு கட்டவேண்டும். பொது மக்கள் ஒரு நிம்மதியான வாழ்வை, நிரந்தரமான வாழ்வை இங்கு நிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகப் பாடுபட்டவர்.

ஆனால் அவரை இந்திய அரசு தொடர்ந்து துரத்திக் கொண்டும், கண்காணித்துக் கொண்டும் இருந்தது. ஐரோப்பிய நாடுகளிலே கிட்டு ஒரு 'பயங்கரவாதி' இவருக்கு நீங்கள் தஞ்சமளிக்கக்கூடாது என அழுத்தங்களை பிரயோகித்தது பிரிட்டிஷ் அரசிற்கு இந்தியா கொடுத்த அழுத்தத்தினால் கேணல் கிட்டு அவர்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டார். இதனால் அவர் சுவிஸ்சர்லாந்துசென்று அங்கு தங்கியிருந்தார். அங்கும் இந்தியா தனது அழுத்தத்தை பிரயோகிக்கத் தொடங்கியது. இதனால் ஐரோப்பிய நாடுகளை விட்டு வெளியேறி அவர் வேறு ஒரு கண்டத்தில் தங்கியிருந்தார். அங்கு தங்கியிருந்த போதும் கூட அவர் தனது பணிகளைக் கைவிடவில்லை. அங்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளின் இறுதியில் ஒரு நிரந்தர சமாதான தீர்வுடன் தமிழீழத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்போதும் இந்தியா அவரைப் பின்தொடர்ந்தது. அவர் சமாதான முயற்சியில்

(4 ஆம் பக்கம் பார்க்க))

# தென்பகுதி தேர்தலுக்கு முன் வடக்கில் பெரும்தாக்குதல்

## சிங்கள வாக்காளரை கவரும் திட்டம்

தென்பகுதியில் இவ்வருடம் தேர்தல் நடைபெறவிருப்பதால் அரசு வடக்கில் பெரும் தாக்குதலை நடத்த திட்டமிட்டு வருவதாக ஏ. எப். பி செய்தியாளர் தெரிவித்துள்ளார். தேர்தலில் சிங்கள வாக்காளர்களை கவரும் வகையில் இந் நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மழைக்காலம் முடிந்ததும் இராணுவம் பெரும் தாக்குதலை நடத்தி இராணுவ ரீதியான வெற்றிகொள்வது அரசின் திட்டமாக இருக்கலாம் எனவும் இதற்கு முன்னோட்டமாக பேச்சுக்கு புலிகளை அழைப்பதாக பிரதமர் ரணில் கூறியிருக்கின்றார் எனவும் ஏ. எப். பி செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

# இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை தொடர்ந்து முன்னர் அறிவித்ததுபோன்று திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் படகுச் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசுக்கு சவாலாக அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டம்

## செல்வி சுடரவள் தெரிவிப்பு

எமது விடுதலைப்போராட்டம் சிறிலங்கா அரசிற்கும் இப்போராட்டத்தை நசுக்க முற்படுகின்ற ஏனைய சக்திகளுக்கும் மிகவும் சவாலாக வளர்ந்து வருகிறது என்றால் அது எமது இலட்சிய உறுதி மிக்க தலைமையினால்தான் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி சுடரவள் நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்றதளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளினதும் நினைவு நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில், எமது தலைமைகளை அழித்துக் கொள்வதற்கு சிறிலங்கா அரசும் இந்திய அரசும் தொடர்ந்து முனைகின்றன. இந்த வகையில் இந்தியாவின் சதியினால் நாங்கள் எங்களுடைய பெரும் தளபதி கிட்டண்ணாவை இன்று இழந்து நிற்கிறோம். ஆனால் இந்தப் போராட்டத்தைக் கட்டி வளர்க்கின்ற தமிழீழ வெற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைப் பேச்சிற்கு அழைப்பது ரணிலின் தேர்தல் பிரசாரமாகும்

## சுதந்திரக்கட்சி எம். பி திலக்கரட்ன

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகளுக்கு விடுத்த அழைப்பு ஓர் தேர்தல் பிரசாரமாகவே கொள்ளமுடியும். இந்தஆண்டு தேர்தல் ஆண்டாக அமைந்துள்ளமையினால் தேர்தலில் வெற்றிபெறவும், வெளிநாட்டு உதவிகளை பெருமளவில் பெற்றுக்கொள்ளவும், வெளிநாட்டுகவனத்தை ஈர்க்கும்நோக்குடனும் தெரிவித்த கருத்து இதுவென சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரான்லி திலக்கரட்ன தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தமது தெரிவுக்குழுவுக்கு கருத்தை தெரிவிக்குமாறு ரணில் விக்கிரமசிங்கா நேற்றுமுன்தினம் அகுரஸ்ச கூட்டத்தில் விடுத்த அழைப்பு தொடர்பாக 'சந்தேசிய' வானொலிக்கு அளித்தபேட்டியில்இதனை தெரிவித்தார். புதிய இராணுவத்தளபதி யுத்தத்தைவிடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பிரகடனம் செய்துள்ள போது பிரதமர் இவ்வாறு பேச்சு வார்த்தை தொடர்பாக திடீர் கருத்து தெரிவித்தமை எம்மை வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

எனவே ஒருபுறத்தில்யுத்தப் பிரகடனமும், மறுபுறத்தில் பேச்சு வார்த்தை என்பதும் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதையிட்டு பலருக்கும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே இவ் அழைப்பை விடுப்பதற்கு முன்னர் யாராவது பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்களா என்பது கூட தெளிவில்லாமல் உள்ளது என திலக்கரட்ன மேலும் தெரிவித்தார்.

முதற்கட்டப் பேச்சுக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பத்தாண்டு காலப் போரில் மற்றுமோர் கொடூரமோதல்

## விரைவில் நடைபெறும் என்கிறது பி.பி.ஸி.

(கொழும்பு)

புதிய தாக்குதலுக்காக கூடுதல்படை வடக்கிற்கு அனுப்பப்படுவதாக இராணுவத் தளபதி கூறுகிறார். வடக்கில் பெய்த கடும்மழை நின்றதும் அடுத்தமாதம் பத்தாண்டு காலப்போரில்இன்னுமோர் கொடூரமான மோதலுக்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றது என பி.பி.ஸி. செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

மேலும் விடுதலைப் புலிகள் தமது ஆலோசனைகளை தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எமது தலைமையை அழிக்க இந்தியாபல்லாண்டுகளாகமுயல்கிறது

(யாழ்ப்பாணம்)

எமது தலைவரை அழிக்க இந்திய அரசின் றோ அமைப்பு திட்டமிட்டுள்ளது. தற்போதைய சில சம்பவங்கள் இதனைக் காட்டுகின்றது. இந்த வகையில்தான் கேணல் கிட்டுவின் மரணமும் நிகழ்ந்தது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் திரு. தேவர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்.

நேற்று மாலை அத்தியடி பஸ்நிலையத்தில் நடைபெற்ற கேணல் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் ஓராண்டு நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே திரு. தேவர் அண்ணா அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது,

1987ஆம் ஆண்டுகோட்டை முனியப்பர் கோவில் முன்னால் இடம்பெற்ற கூட்டமொன்றில் தியாகி திலீபன் இதனைத் தெளிவாகத் தெரிவித்திருந்தான்.

எமது தலைமையை அழித்து, இந்த விடுதலைப் போராட்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்


### வியாபாரிகட்கு

பாடசாலை பாக்குகள், உபகரணங்கள்; தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப் பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல்வகைகள்அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள— ஜெயா அழகு சாதனமாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8366)

### கொம்பியூட்டர் வகுப்புகள்

C S A ஆரம்பம் 4 மாத BASIC Programming 15-1-94 காலை 8-30 மணி 7 மாத Data processing and BASIC Programming 18-1-94 காலை 8-30 மணி Computer Science Academy, Navalady Lane, Thirunelvely. (சி-8379)

### கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா லோமன் புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7247)


### இரண்டாவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம் மிட்ரவுன் றோட்டரக்ட் கழகம் தமது இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இன்று திருநெல்வேலி சைவவித்தியா விருத்தி சங்கத்தில் அங்குள்ள சிறுவர்களுக்கு மருத்துவ சேவையையும், மதிய போசனத்தையும் அங்குள்ள சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு தேவையான நூல் வகைகளையும் வழங்கவுள்ளது.

### பனைவிதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் மேற்கொள்ளப் பட்டுவரும் பனை நடுகைத் திட்டத்தின் விளைவாக 1993-ம்ஆண்டுக்கான பனை விதை நடுகைக் காலப்பகுதியில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பனை விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

பனைவளம் சார்ந்த நிறுவனங்களுக் கூடாகவும், வேறு பலபொது ஸ்தாபனங்கள் தொண்டர் அமைப்புக்கள் சாரணர் குழுக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றுக் கூடாகவும்

---

ஈழநாதம்

# 4-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப் படும்.

### ❋ சிறுகதை ❋ கவிதை

### போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல்வேண்டும்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப் பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானதாகவோ, வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காகக் கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.
- போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் ''ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி'' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

ஆசிரியர்,
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

---

ஈழநாதம்

# 4-ம் ஆண்டு நிறைவு

மாணவர்களுக்கான

---

# கைவிடப்பட்ட நிலையில் கிழக்குப் பல்கலைக் கழகம்

## ஆசிரியர், மாணவர் விரக்தி

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் மற்றும் மாணவர் மத்தியில் ஏமாற்ற உணர்வு நிலவுகிறது. பல்கலைக் கழக அனுமதிக்கான கல்வித் தகைமை மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களை அனுமதிப்பதற்குப் போதிய வசதியிருந்தும் தாம் கைவிடப்பட்டுள்ளதாக பல்கலைக் கழகத்துக்கு வெளியில் உள்ள மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்கள் கருதுகிறார்கள்என்று துணை வேந்தர் பேராசிரியர் ஆர். சந்தானம் கூறியுள்ளார்.

துணை வேந்தர் பேராசிரியர் ஆர். சந்தானம் புறண்லைன் சஞ்சிகைக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறைவான எண்ணிக்கையில் மாணவர்களை அனுமதிப்பது, அதன் பலனாகக் குறைவான நிதி உதவி ஆகியவற்றால் சிறிலங்கா அரசு கிழக்குப்பல்கலைக் கழகத்தை நெருக்கடி நிலைக்குத் தள்ளியுள்ளது. பல்கலைக் கழகம் நிலைத்து நிற்குமா என்று அறிவுஜீவிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். பல்கலைக் கழகத்தின் எதிர்காலம் நூலிழையில் தொங்குகிறது - இவ்வாறு புறண்லைனில் வி. ஜெயத் என்றகட்டுரையாளர் எழுதுகிறார்.

பல்கலைக் கழகம் நான்கு பிரதான கற்கை நெறிகளுடனும், 1,000 மாணவர்களுடனும் இயங்குகிறது. 90 ஆசிரியர்களும், 150நிர்வாக உத்தியோகத்தர்களும் கடமையாற்றுகிறார்கள். ஆனால், இரண்டு வருடங்களில் பல்கலைக் கழக அனுமதி 460இல் இருந்து 200ஆகச் சுருங்கியுள்ளது.

1990 நெருக்கடிகளுக்குப் பிறகு பல்கலைக் கழக மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றுசேர நகரத்துக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். பல்கலைக் கழக வளாகம் 15,000 பேர் தங்கியுள்ள அகதி முகாமாக இப்போது மாற்றப்பட்டுள்ளது. கட்டடங்களைத் தவிர அங்கு வேறொன்றும் இல்லை. மெதுவாகப் புனரமைத்து உபகரணங்களையும் சேர்க்க வேண்டும்.

இப்பொழுதுள்ள அனுமதி முறையில் 40 விகித இடங்கள் திறமையடிப்படையிலும், 55 விகித இடங்கள் மாவட்டக் கோட்ட அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன 5 விகித இடங்கள் பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இந்த வகையில் 200 மாணவர்களே கிழக்கில் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். ஆனால் 400 மாணவர்களை அனுமதிப்பதற்கான வசதி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் உள்ளது. மேலதிகமான அனுமதிக்கு இடமில்லை. இந்தப் பிரசித்தமான பல்கலைக் கழகத்துக்கு இதுதான் அதன் முடிவுக்கான ஆரம்ப அறிகுறியாகும் என்று 'துயரத்தில் ஒரு பல்கலைக் கழகம்' என்ற கட்டுரையில் கிழக்குப் பல்கலைக் கழகம் பற்றி வி. ஜெயத் எழுதுகிறார்,

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று சென். ஜோன்ஸ் அக்கடமியில் பெறவுள்ளது.

### பரிசில் வழங்கிப் பாராட்டு

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் ஆறாம் ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் பெற்றமாணவி ஒருவருக்கும் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கென நடத்தப்பட்ட ஆண்டிறுதி பொதுப் பரீட்சையில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் மல்லாகம் கிராம அபிவிருத்தி சபை பாராட்டிப் பரிசில்கள் வழங்கியுள்ளது. மேலும் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து பயின்று க.பொ.த (சா.த) பரீட்சையில் சிறந்த சித்தி பெறும் மாணவர்களுக்கும், க.பொ.த(உ.த) வகுப்புகளில் கல்வி கற்போருக்கும் இச்சங்கம் பரிசில்கள் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மீளக்குடியமர்விற்கு உதவி

தென் தமிழீழப்பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வந்த 25 குடும்பங்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வு கழகம் மேற்கொண்டுள்ளது இக் குடும்பங்களுக்கான தற்காலிகவதிவிடங்களை அமைத்துக் கொடுத்திருப்பதுடன் அவர்களுக்கான சமையற் பாத்திரம், உடுபுடவைகள் என்பவற்றையும் வழங்கி சுய தொழில் முயற்சிக்கானஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது.

மண்டைதீவு மகாவித்தியாலயம்

# இடம்பெயர்ந்த மாணவரை உடன்சேர பணிப்பு

---

### இடமாற்றம்

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த மூன்று வருடங்களாக இயங்கி வந்த காரைநகர் பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை தொல்புரம் கிழக்கில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்க ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கான கட்டட வசதியை தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் ஒழுங்கு செய்துள்ளார். (41)

### இராசரட்ணம் காலமானார்

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினரான சுதந்திரக் கட்சியை சேர்ந்த ரி.டபிள்யூ இராசரட்ணம் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார் இவர் 1989-ம் ஆண்டு தேர்தலின் பின்னர் சுதந்திரக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் நியமனம் செய்யப்பட்டவர் ஆவார் இவர் உயர் நீதிமன்ற நீதியரசராகவும் கடமையாற்றியுள்ளார்.

---

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-17

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்-முழங்காவில், நாயாற்றுவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில்வீரச்சாவெய் திய-

**றோஸ்மன்** (பிரான்சிஸ் பீரிஸ் இருதயநேசன் பீரிஸ் - அரிப்புத்துறை - சிலாவத்துறை - மன்னார்)

யாழ்- பருத்தித்துறை முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இம்முகாமிற்குப் பாண் விநியோகித்து வந்தவரான தமிழ்ப்பொதுமகன். குரும்பசிட்டி, குப்பிளான், கட்டுவன், ஏழாலைப் பகுதிகளில் சிறிலங்காப்படையினர் ஏழுமணிநேரம் மேற்கொண்ட அட்டூழியங்களில் கொல்லப்பட்ட, 06 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - வாகரை கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி வாகரை முகாமில் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட,

❋ **கமல்** (ஆறுமுகம் நல்லதம்பி - மூதூர் - திருகோணமலை)

கிளி-ஆனையிறவு, குறிஞ்சாத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். ஜொனி** (அன்பாயுதம் சீமான் - உதயநகர் மேற்கு-கிளிநொச்சி)

**லெப். சதா** (பொனிபொஸ் எல்விஸ்திமதி - இயக்கச்சி-பளை)

**அஜித்** (ராஜன் - கொழும்பு)

**லெப். குகன்** (சுப்பிரமணியம் சண்முகராசா-மந்துவில்-கொடிகாமம் - யாழ்)

**லெப்.அர்ச்சுனா** (நடராசா ஜெயபாலன்-கல்வயல், சாவகச்சேரி - யாழ்)

இதே சமரின்போது சிறிலங்காப்படையினர் மேற்

போன்றவற்றுக் கூடாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் பனை நடுகைத் திட்டமானது கடந்த சில வருடங்களாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

மேற்படி நடவடிக்கையின் மூலம் 1991ம் ஆண்டு 150, 000 பனைவிதைகளும் 1992-ம் ஆண்டு 157, 000 பனை விதைகளும், 1993-ம் ஆண்டுக்கான நடுகைக் காலத்தில் 346,000 பனை விதைகளும் நாட்டப்பட்டுள்ளன.

இவை யாழ் குடாநாட்டுப் பகுதிகளிலும், வன்னி, முல்லை, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

## பழுதான மீன்ரின் இலவசமாக விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பை நிர்வகித்துவரும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் குடியிருப்பு மக்களுக்குச் சென்ற 12-ம் திகதி புதன் கிழமை இலவசமாக வழங்கப்பட்ட மீன்ரின்களில் 40 வீதமானவை பழுதடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மீன்ரின்களில் காலாவதியாகும்காலம் இவ்வாண்டு யூன் மாதமெனக் குறிக்கப்பட்டுள்ளபோதிலும் ஆறு மாதத்திற்குமுன்பே அவை பாவனைக்கு உதவாதநிலையை எட்டியுள்ளன. இவற்றில் சிலவற்றைஉடைத்தபோதே, சகிக்கமுடியாததுர்நாற்றம்வீசியதாகவும், சிலவற்றில் புழுக்கள் நெளிந்ததாகவும் இதனால் இத்தகைய மீன்ரின்கள் பாவிக்கப்படாது வீசப்பட்டதாகவும் குடியிருப்புவாசிகள் தெரிவித்தனர். இதுபற்றி மீன்ரின்களை வழங்கிய மேற்படி நிதியத்தினரிடமும் கூறப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (22)

## கட்டுரைப் போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

**தலைப்பு:**

### "போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?"

**போட்டி விதிகள்:**

- கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
- இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்.
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாவில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்,**

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

யா/மண்டைதீவு மகா வித்தியாலயம் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தியில் இயங்கிவருகிறது. இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து யாழ். மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் அனைத்து மாணவர்களும் மேற்படி யா/மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் மீண்டும் வந்து உடனடியாக சேருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகுந்த ஆவணங்களின்றி வேறு பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் தங்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்களுக்கு பாடசாலை பொறுப்பேற்க இயலாதிருக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளுமாறும் அதிபர் அறியத் தருகிறார்.

## நீங்காத நினைவுடன் ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
25-7-1974

தாயக மண்ணில்
17-1-1993

### லெப்டினன்ட் எல்லாளன் (நிகடா)

(இராசதுரை சிறீகாந்தநாதன்)

(தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்)

அடிமை விலங்கை உடைத்து! நீயும்
அமரர் ஆனாய் மகனே!
நம் விடிவு வேளை
வெகு தொலைவில் இல்லை!
உன் நினைவில் வாழ்வோம் தினமே!

இன்று (17-1-94) எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுகளுடன்
அப்பா, அம்மா,
சகோதரங்கள்.

லம்போதரன் வீதி,
தொல்புரம் கிழக்கு.
சுழிபுரம்.

(7249)

இதே சமரின்போது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுமன்** (இளையதம்பி ஜெயானந்தராசா-முகமாலை கொடிகாமம் - யாழ்)

1988ஆம் ஆண்டு யாழ்-தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**அசீஸ்** (நடராசா விமலேந்திரன்- செருக்கப்புலம் அம்பனை யாழ்)

1989ஆம் ஆண்டு மட்டு-களுதாவளைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சோமன்** (— சோமசுந்தரம் - களுவாஞ்சிக்குடி-மட்டு)

இதே சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நிசாம்/றிச்சாட்** குழந்தைவேல் ராஜேந்திரன்-37-ம் (கிராமம், களுதாவளை-மட்டு)

வவுனியா-மாமடுப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்துடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ரகு** (பூவிலிங்கம் தாஸ்நிதி-ஊரெழுமேற்கு, சுன்னாகம்-யாழ்)

வவுனியாவில் திருமண வைபவமொன்றிற்குச் சென்று கொண்டிருக்கையில் பூந்தோட்டம் பகுதியில் வைத்து சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ்-நெடுந்தீவு, பனங்காணிமுனை) சிறிலங்கா கடற்படைப்படகினால் மோதிக்கொல்லப்பட்ட கடற்றொழிலாளியான பலாலியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாவடிவேம்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்,

1993ஆம் ஆண்டு யாழ் - அளவெட்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். எல்லாளன்/நிகடா** (இராசதுரை சிறிகாந்தன்-சுழிபுரம் தெற்கு-யாழ்)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்,

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(கி-8396)

சிந்தனைக்கு

நண்டு நேராக நடக்கும்படி செய்யமுடியாது.

— அரிஸ்டோஃபேனஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# அரசின் இரட்டை வேடம்

புதியதொரு தெரிவுக்குழு தனது தலைமையில் செயற்பட்டு வருவதாகவும், விடுதலைப்புலிகள் தமது யோசனைகளை இத்தெரிவுக்குழு முன் வைக்கலாம் எனச் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளமை பலருக்குப் பெரும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தெரிவுக்குழு எப்பொழுது உருவானது, யாரால் உருவாக்கப்பட்டது, இதில் யார் யார் அங்கம் வகிக்கின்றனர், எந்தெந்த கட்சியினர் இடம் பெறுகின்றனர், இவை போன்ற பல அம்சங்கள் மக்கள் மத்தியில், இவ் ஆச்சரியத்தைத் தோற்றுவிக்கக் காரணமாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று உருவாக்கப்படுவதென்பது இரகசியமாக நடைபெறும் ஓர் அம்சமல்ல. பாராளுமன்றத்தில் பகிரங்கமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இந்நிலையில் பிரதமர் ரணில் தலைமையில், எதுவித ஆரவாரமோ அறிவிப்போவின்றி உருவாக்கப்பட்டுள்ள 'தெரிவுக்குழுவானது' உண்மையில் தெரிவுக்குழுதானா? அல்லது ஆளும் ஐ. தே. கட்சிக்குழுவா? என்பது இன்றுவரை முக்கியமானதொரு கேள்வியாகும்.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வே முடிந்த முடிவு என்ற நிலையில், இதற்கு எதிரான கண்டனங்களும் பலமாகவே உள்ளன. இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்றதொரு மாயைத் தோற்றத்தை உருவாக்குவதே இத்தெரிவுக்குழுவின் நோக்கமாகும்.

1991ஆம் ஆண்டின் மத்தியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள மூனசிங்கா தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தும், இனப்பிரச்சினைக்கு அக்குழுவால் ஆக்கபூர்வமான தீர்வு எதையும் முன்வைக்க முடியவில்லை, கொழும்பிலுள்ள தமிழ்குழுக்களைத் திருப்திப் படுத்தும் அளவிலானது சிங்களப் பேரினவாத சக்திகள் சிறிதளவு விட்டுக் கொடுப்புக்களையும் செய்யத் தயாராக இருக்கவில்லை. இதேவேளை, இதற்கு முன்னர் கூட்டிய வட்டமேசை மாநாடுகள், சர்வகட்சி மாநாடுகள் என்பனவும் தீர்வைத்தர தவறிவிட்டன.

இந்நிலையில், பிரதமர் ரணில் 'இரகசிய' பாராளுமன்றத் தெரிவுக் குழு - ஐக்கிய தேசியக் கட்சி தெரிவுக் குழு-எவ்வாறு பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதே கேள்வியாகும். அதாவது பகிரங்க விவாதத்தின் மூலம்

# நெற்செய்கை மதிப்பீடு அவசியமாவது ஏன்?

தமிழீழமானது விவசாய உற்பத்தியில் சிறந்து விளங்குவதற்கு அதனது மண் அமைப்பும், காலநிலையுமே காரணமாக அமைகின்றன எனலாம், தமிழீழ மாவட்டங்கள் அனைத்தும் விவசாய உற்பத்தியில் சிறந்துவிளங்குகின்றன. இலங்கைத்தீவுமக்களின் பிரதான உணவுத் தானியமான அரிசி உற்பத்தியில் தமிழீழம் தன்னிறைவு அடைந்து பல ஆண்டுகள் சென்றுவிட்டன என்பதுடன் இன்று தமிழீழத்திற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் ஊடகங்களில் ஒன்றாகவும் இது மாறியுள்ளதைப் புள்ளி விபரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

எமது மக்களின் பிரதான உணவு அரிசியாகும். அது தனிநபர் உணவுத் தேவைகளின் 38வீத கலோரித் தேவையையும், 31வீத புரதத்தேவையையும் பூர்த்திசெய்கின்றது. இதன்காரணமாக நாம் எமது அரிசி உற்பத்தியை மதிப்பிட்டு அதைஅடிப்படையாகவைத்து எமது மக்களுக்குத் தேவையானஅரிசியைப்பகிர்ந்தளிக்கவும், குறை இருப்பின் அரிசியை இறக்குமதிசெய்து இந் நடவடிக்கையைச்செயற்படுத்தவும், மேலதிகமான உற்பத்தி இருப்பின் அதை ஏற்றுமதி செய்யவும் கூடியதாக இருக்கும். இவற்றின்முக்கியத்தைக் கருத்திற்கொண்டு எம்மால் முதல் நடவடிக்கையாக எமது பிரதேசத்தில் பண்படுத்தப்பட்ட நெற்காணிகளின் நிலப்பரப்பும் ஒவ்வொரு போகத்திலும் விதைக்கப்படும், அறுவடைசெய்யப்படும் நிலப்பரப்பும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு வரும் பெரும்போகம் (93|94) தொடக்கம் எமது பிரதேசத்தில் நெல் விளைச்சலை மதிப்பிடும் முகமாக அளவீடுகளை செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இச்செயற்பாட்டின் முதற்கட்டமாக வட தமிழீழத்தின் பெரு நிலப்பரப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள சகல மாவட்டங்களிலும் இவ் அளவீடு செய்யப்படவுள்ளது.

1993|94 பெரும் போகத்திற்கான நெல் விளைச்சல் மதிப்பு அளவீடு செய்யும் முகமாக ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மொத்த நிலப்பரப்பில் 1000ஏக்கருக்கு ஒரு கிராமம் என்ற அடிப்படையில் நிகழ்தகவு விகித மாதிரித் தெரிவு முறைப்படி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொருகிராமத்திலும் எளிய எழுமாற்று மாதிரித் தெரிவு மூலம் இரண்டு நெற் செய்கையாளர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய நெற் காணிகளிலே இந்த அளவீடு செய்யப்பட இருக்கிறது.

இவ் அளவீடு 1952ஆம் ஆண்டு இலங்கையில் கோஷால் என்ற உலகஉணவு விவசாய ஸ்தாபன புள்ளி விபரவியலாளரினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையில் செய்யப்பட இருக்கிறது. இம்முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு காணித் துண்டத்திலும் மாதிரித் தெரிவு மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாத்தியில் எழுமாற்று முறைப்படி அமைக்கப்படும் 16½ அடி அகலம் கொண்ட ஒரு சதுரக் காணித்துண்டில் எமதுபயிற்சி பெற்ற வெளிக்கள உத்தியோகத்தர்களினால் அறுவடை செய்து விளைச்சல் பெறப்படும். இந்த அளவீட்டிலே பெறப்படும் விபரங்களைக் கொண்டு புள்ளி விபர ரீதியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு பிரதேசத்திற்குமான உத்தேச நெல் விளைச்சல் மதிப்பிடப்படும்.

இவ் அளவீட்டை சரியான முறையில் செய்வதற்கு நெற்செய்கையாளர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுப்பது மிகவும் அவசியமாகும். இவ் அளவீட்டை சரியாகச் செய்யாவிடில் இது எமது மக்களையும், நெற்செய்கையாளர்களையும் பாதிக்கும். உதாரணமாக இவ் அளவீட்டில் விளைச்சல் கூடுதலாக இருந்தும் தவறுகள் காரணமாக குறைந்த விளைச்சலைக் கணிப்போமானால் எமது தேவைக்கு மேலதிகமாக வெளி இடங்களில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டி இருக்கும். உண்மையில் விளைச்சல் கூடுதலாக இருக்கும் போது மேலதிக அரிசியை இறக்குமதி செய்வதினால் அரிசி தேக்கமடையும், அரிசி விலை குறையும். இதனால் நெற்செய்கையாளர்கள் பாதிக்கப்படுவர். இது போன்று உண்மையில் விளைச்சல் குறைவாக இருக்கும் போது அளவீட்டின்படி விளைச்சலைக் கூடுதலாகப் பிழையாகக் கணிப்போமானால் அரிசித் தேவையைத் கணிக்கும் போது எமது தேவைக்கு நெல் விளைச்சல் போதுமென்று கருதி மேலதிகமாக அரிசி இறக்குமதி செய்யப்படமாட்டாது. இதன் காரணமாக அரிசி பற்றாக்குறை ஏற்படுவதுடன் விலை ஏற்றமும் ஏற்படுவதின் காரணமாக மக்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த நிலை ஏற்படாது இருக்கவும் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதிக்காத வகையில் நெல்லுக்கான சரியான ஒரு விலை நிர்ணயத்தை நிர்ணயிக்கவும் உத்தேசச் செலவு மதிப்பீட்டு வேலையிலும் நெல் உற்பத்தி மதிப்பீட்டு வேலையிலும் ஈடுபட்டிருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளி விபரக்கிளையினருக்கு சம்பந்தப்பட்ட சகலரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். (தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்)

# ஐ.தே.கவுடனான உறவு சீர்செய்யப்பட முடியாது

-தொண்டமான்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இனி எக்காலத்திலும் உறவு இருப்பது சாத்தியமானது அல்ல என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். அண்மையில் கொட்டகல பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கை தொழிலாளர் காங்கிரசில் ஏற்பட்டிருக்கும் பிளவு சீர் செய்யப்படக்கூடியது. ஏனெனில் நாம் அனைவரும் ஒரே வீட்டுப் பிள்ளைகள். ஆனால் ஐ தே கவுடன் இனிமேலும் இணைந்து செயற்படுவது சாத்தியமானது அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

# நகர் பாடசாலையைநாடுவது மாணவருக்கு பாதிப்பு

## கோப்பாய் பிரதேச கோட்ட கல்வி அதிகாரி

''மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடி ஓடுகின்ற தன்மையானது உளவியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் மாணவர்களுக்குப் பாதகமாகவே அமைந்துவிடுகின்றது. தன்னுடைய கிராமியச் சூழலுக்கு அன்னியப்பட்டது மட்டுமின்றித் தனது தாய், தந்தையருக்கும் அன்னியமாகி மாணவன் வாழ்கின்ற தன்மையானது நீண்டகாலத்தில் மாணவருக்கு ஏதோ ஒருவித விரக்திக்கு இட்டுச்செல்கின்றது. இத்தன்மையைச் சாதாரண பெற்றார்கள் உணராதிருக்கும் தன்மையைவிட கற்ற பெற்றார்கள்கூட உணராதிருப்பதுதான் வியப்பைத் தருகின்றது''.

இவ்வாறு யாழ். அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்தப் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் பிரதேசக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. பீ. வீரபத்திரன் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

''கிராமத்திலிருந்து மாணவர்களிடத்திலே தெரிவுசெய்யப்பட்டு 'சாறுகள்' என்ற அளவில் உள்ள மாணவர்களைத்தான் நகர்ப்புறப் பாடசாலைகள் தெரிந்தெடுக்கின்றன. கிராமத்துப் பாடசாலைகளும், ஆசிரியர்களும் மீதியாக விடப்பட்ட மாணவர்களைத் திரும்பவும் தமது திறமையினாலும், அர்ப்பணிப்புத் தன்மையினாலும், கடமையுணர்வினாலும் சாறுகளாக்குகின்றார்கள். இச்சாறுகளை ஐந்தாம் ஆண்டிலும், பதினொராம் ஆண்டிலும் இழக்கும் கிராமியப் பாடசாலைகள் மீண்டும்மீண்டும் நகர்ப்புறப் பாடசாலைகளிலும் பார்க்கச் சிறந்தபெறுபேறுகளைப் பெறுகின்றன''

''இந் நிலையில் தம்மை நம்பிவந்த மாணவர்களுக்குத் துரோகமிழைக்கும் தன்மை யாரால் ஏற்படுத்தப்படுகின்றது? கிராமப்புறத்துப் பாடசாலைகளின் ஆசிரியர்களாலா? நகர்ப்புறத்துப் பாடசாலைகளின் ஆசிரியர்களாலா? மிகச்சிறந்த மாணவர்களெனத் தெரிவுசெய்யப்பட்டு எடுக்கப்பட்ட மாணவர்களில் சிலர்மட்டும் சிறப்புப் பெறுபேறுகள் பெற பெரும்பாலான மாணவர்கள் அந் நிலையை அடையாமைக்கு யார் காரணம்? இது சிந்திக்கப்பட வேண்டிய மாபெரும் கல்விப் பிரச்சினையாகும்'' என்றார்.

கல்லூரி அதிபர் க. இராசதுரையின் தலைமையில் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவிற்கு வலிகாமம் பகுதிக்குப் பொறுப்பான மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வன் க. செழியனும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

# இந்திய துணைக்கண்டப் பகுதியை அணு ஆயுதமற்ற பிரதேசமாக்குக

# கட்சிமேலிடத்தின்முடிவுக்கு கட்டுப்பட்டு நடப்பேன்

-கர்நாடக முதல்வர் தெரிவிப்பு

(டில்லி)

...யாகும். அதாவது பகிரங்க விவாதத்தின் மூலம் சாதிக்க முடியாத தீர்வை இரகசிய நடவடிக்கை மூலம் சாதிக்க எண்ணுவது, போன்று பாசாங்கு செய்வதும் எதிர்க்கட்சிகளை சமாளிக்க முடியும் எனக் காட்ட முற்படுவதும் பெரும் ஏமாற்று நடவடிக்கையாகும்.

இதேவேளை, சமாதானத் தீர்விற்கு தமது ஆலோசனைகளை வழங்குமாறு, விடுதலை புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள பிரதமர் ரணில் ஆலோசனைக்கு வரையறைகளையும் விதித்துள்ளமை வேடிக்கைத்தனமானதாகும். அதாவது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களை நிர்வாக அலகைக் கொண்டதாக இருக்கும் என ஆலோசனைக்கு எல்லை வகுத்திருப்பதும் ரணில் விக்கிரமசிங்கா, ஐ. தே. கட்சியின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளதே ஒழிய, தெரிவுக்குழுவிற்கு ஆலோசனை வழங்குமாறு விடுக்கும் கோரிக்கையாகத் தெரியவில்லை.

இந்தவகையில் நோக்கும் போது ரணில் விக்கிரமசிங்காவின் யோசனைகள் சிங்களப் பேரினவாத சக்திகளையும், இதேவேளை சமாதானத்தை அரசு புறக்கணிக்கின்றது என்ற குற்றச்சாட்டை நிவர்த்தி செய்வதற்குமான நடவடிக்கை என்றே கூறலாம். அதாவது வடக்கு - கிழக்கு இணைக்கப்படாது என்ற அறிவிப்பும், மறுவளமாக சமாதானத்திற்கு அரசு தயாராக உள்ளதென்ற அறிவிப்பும் டி. பி. விஜேதுங்க அரசு இரட்டைவேடம் போட முற்படுகின்றது என்பதையே காட்டுவதாய் உள்ளது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்காவின் இவ் அறிவிப்பானது, பேச்சுவார்த்தைக்கோ, அன்றிச் சமாதான சூழலுக்கோ ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதில்லை பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் விதிப்பதும், வரையறைகள் செய்வதும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு மட்டுமல்ல; எந்தவித பிரச்சினைக்குமே தீர்வை எந்தவேளையிலும் கொண்டு வந்து விடப்போவதில்லை.

அதிலும், விடுதலைப்புலிகள் ஒரு தடவை அல்ல, பல தடவை தமது நிலைப்பாட்டை பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர். இதில், இராணுவ மிரட்டல்களுக்கோ அச்சுறுத்தலுக்கோ பயந்து புலிகள் பேச்சுவார்த்தையில் ஒருபோதும் ஈடுபடப்போவதில்லை என்பதும், நிபந்தனைகளுடன் கூடியதும், சமாதானத்திற்கான சூழ்நிலை உருவாக்கப் பெறாமல் ஒரு போதும் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்கப் போவதில்லை, என்பதும் முக்கியமானவையாகும். இந்தவகையில் அச்சுறுத்தல், நிபந்தனை என்பனவற்றுடன் கூடிய ரணில் விக்கிரமசிங்காவின் அறிவிப்பானது பிரச்சினைத் தீர்விற்கு எந்தவிதத்திலும் உபயோகமானதாக அமையவில்லை என்பதே உண்மையாகும்.

## இந்தியா, பாகிஸ்தானிடம் அமெரிக்கா, ரஷ்யா கோரிக்கை

(டில்லி)

இந்திய துணைக்கண்டப் பகுதியை அணு ஆயுதமற்ற பகுதியாக மாற்றிட பல தரப்பு பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு இந்தியாவையும், பாகிஸ்தானையும் அமெரிக்காவும், ரஷ்யாவும் கோரியுள்ளன.

பேரழிவை ஏற்படுத்தக் கூடிய அணுவாயுதங்களை அழிப்பது தொடர்பான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அமெரிக்க அதிபர் பில்கிளிண்டனும், ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினும் இதனைக் கூட்டாக தெரிவித்தனர். மேலும் தெற்காசியாவில் ஆயுதக் கட்டுப்பாடுதொடர்பாக பாகிஸ்தானும், அமெரிக்காவும் மேற்கொள்ளும் பலதரப்பு பேச்சுக்களுக்கும் அவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

## அணு ஆயுத பரவல் தடுப்பு; உடன்பாடு பாரபட்சமானது

### இந்தியா மீண்டும் தெரிவிப்பு

அணுஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் இப்போதும் பாரபட்சமானதாக இருப்பதால் அதனை மாற்ற வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடந்தவெள்ளியன்று மாஸ்கோவில் வெளியிடப்பட்ட அமெரிக்க-ரஷ்ய கூட்டு ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில், ஐக்கியநாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்திய கருத்துக்கள் தான் அடிப்படையாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

விரிவான சோதனைகளுக்கு தடை விதிக்கும் ஒப்பந்தமொன்றை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்து முடிக்க வேண்டும் என்றும், அது எல்லா நாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் இந்தியா விரும்புவதாகவும் தெரிவித்தார். அத்துடன் இது தொடர்பாக இந்தியா தனது அயல் நாடுகளுடன் நம்பிக்கையை வளர்க்கும் பொருட்டு அடுத்தடுத்து பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அணுஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்ததை இப்போதுள்ள வடிவிலேயே தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று மாஸ்கோ பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள இந்தியா பாகுபாடு காட்டாத வகையில், அந்த ஒப்பந்தத்தை மாற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளது. பேரழிவை ஏற்படுத்தக் கூடிய எல்லா ஆயுதங்களையும் முற்றாக அழிக்க வேண்டும் என்ற முக்கிய தேவையை இந்த ஒப்பந்தம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபர் பில்கிளிண்டனும், ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினும், மாஸ்கோவில் சந்தித்துப்பேச்சு நடத்திய பின்னர், கடந்த வெள்ளியன்று வெளியிட்ட கூட்டுப் பிரகடனத்தில் தென்னாசியாவில் அணுவாயுத பரவல் தடுப்பு தொடர்பாக பல தரப்பு பேச்சு நடத்த ஓர் அமைப்பு ஏற்படுத்தவும், பாகிஸ்தானும் இந்தியாவும் அணு ஆயுத பரவல் தடுப்பு உடன்பாட்டில் கையெழுத்திடவும் கோரப்பட்டிருந்தது தெரிந்ததே.

## ஜெயலலிதா சென்னை திரும்பினார்

புதுடில்லிக்கு ஒரு நாள் பயணமாகச் சென்றிருந்த தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் இரவு மீண்டும் சென்னை திரும்பியுள்ளார். புதுடில்லியில் குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவைச் சந்தித்துப் பேசிய போது சென்னையில் அடுத்த மாதம் இரண்டாம் திகதியன்று நடைபெற இருக்கும் சர்வதேச தடகள விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைக்கும்படி குடியரசுத் தலைவருக்கு அழைப்பு விடுத்தார். இது குறித்துப் பரிசீலிப்பதாக குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## பாரிஸ் ஈழநாடு அலுவலகத்தில் குண்டு வெடிப்பு

(பாரிஸ்)

பாரிஸில் உள்ள ஈழநாடு தினசரியின் அலுவலகம் குண்டு வெடிப்பினால் தீப்பற்றி எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் பாரிஸ் ஈழநாடு அலுவலகத்திலிருந்த கம்பியூட்டர்களும் ஏனைய ஆவணங்களும் அழிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

... முதல்வர் தெரிவிப்பு

(டில்லி)

கர்நாடக மாநில காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள விரிசலைத் தீர்க்கும் முகமாக கட்சி மேலிடம் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தான் கட்டுப்படுவதாக கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி கூறியுள்ளார்.

புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவை சந்தித்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும்கூறுகையில், கட்சி மேலிடத்துடன் தாம் நடத்திய நீண்ட பேச்சுவார்த்தைகளின் போது தமது இந்த நிலையைத் தான தெளிவுபடுத்தி விட்டதாகவும் எடுத்துரைத்தார்.

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆயுத உதவி

### தீவிரவாதகுழு முன்னாள் தலைவர் தெரிவிப்பு

(டில்லி)

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உளவு ஸ்தாபனமான ஐ எஸ் ஐ ஆயுத உதவி வழங்குவதாக ஜம்மு காஷ்மீரில் உள்ள ஒரு தீவிரவாதக் குழுவின் முன்னாள் தலைவர் குரேஷி தெரிவித்துள்ளார் இவர் இப்போது நெதலாந்தில் குடியேறியுள்ளார்.

காஷ்மீரை நிலைகுலைய வைக்க இந்த ஐ. எஸ். ஐ காஷ்மீர் தீவிரவாதிகளைப் பயன்படுத்துகிறது என அவர் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மகாராஷ்டிரா கலவரங்கள் பஸ், ரயில்நிலையம்தீக்கிரை

(டில்லி)

மகாராஷ்டிரா மாநிலத்தில் இருக்கும் மராத்துவா பல்கலைக்கழகத்தின்பெயரை டாக்டர் அம்பேக்கர் பல்கலைக்கழகம் என்று மகாராஷ்டிரா அரசு மாற்றியமைக்கு இந்துதேச தீவிரவாதிகளின் அமைப்பான சிவசேனை இயக்கம் பலத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சிவசேனை இயக்கம் இந்தப் பெயர்மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் மகாராஷ்டிரா மாநிலத்தில் சாதிக் கலவரம் பெருமளவில் வெடித்துள்ளது. உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் தொண்டர்களும், குண்டர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தி அரச பஸ்கள், ரயில் நிலையங்கள் மற்றும் பொது உடைமைகளை சேதமாக்கியிருப்பதுடன் தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோரின் கடைகளையும் தீவைத்து கொளுத்தியுள்ளனர்.

இந்த அமைப்பே கடந்த வருடத்திலும் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் ஈடுபட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மழைநீரை பெருங்கடல் எனத் தேக்கிடுவார் - தேக்கார் தேசிய நலன் பேணார்

# எந்த நாட்டையும் நம்பி போராட்டத்தை தலைவர் ஆரம்பிக்கவில்லை

## நூல் வெளியீட்டு விழாவில் செம்பியன்

(யாழ்ப்பாணம்)

''எமது தலைவர் எந்த நாட்டையும் நம்பி இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை எமது வளங்களே எமது பலமாகும்''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ''எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்'' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையில் அதன் பொறுப்பாளர் திரு. செம்பியன் தெரிவித்தார்.

இந் நூல் வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவாக வெளியிட்டு வைக்கப்பட்டது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, அண்மைக்கால யுத்தத்தில் பொருளாதாரத்தடை எமது மக்களை பீதியடையச் செய்தது. இராணுவ மற்றும் பொருளாதார அச்சுறுத்தல்கள் மக்களை இடம்பெயர வைத்தது. இதனால் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது. இன்று அவற்றையெல்லாம் விலக்கி எமது பொருளாதாரம் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது என்றார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய இந் நிகழ்விற்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திய தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தெரிவிக்கையில்,வீரம் செறிந்த எமது தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் பெரும்பங்காற்றிய தளபதி மற்றும் போராளிகள் நினைவாக இன்று இந் நூல் வெளியிடப்படுகின்றது. நாம் தனித்துகைத்தொழிலில்தொழில் நுட்பத்தின் மூலம் பொருண்மியத்தை நிலைநிறுத்த முடியாது. எமக்கு கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி சகல துறைகளிலும் எமது பொருண்மியத்தை நிலைநிறுத்துவதன் மூலம் எமது இலக்கை அடைந்து விடலாம் எனவும் இதற்கு உலக நாடுகள் சான்று பகர்கின்றன எனவும் தெரிவித்தார்.

இந்நூலினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் வெளியிட்டு வைத்தார். மதிப்பீட்டுரைகளை திரு. சிவநாதன், பேராசிரியர் பாலகிருஷ்ணன், திரு. பாலகுமாரன்ஆகியோர் நிகழ்த்தினர்.

அங்கு மதிப்பீட்டுரை நிகழ்த்திய தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. பாலகுமாரன் தெரிவிக்கையில் இங்கு தற்சார்புக் கோட்பாடு வளர்ச்சி பெற்று வருகின்றது. இது எங்கள்போராட்டத்தின் வெற்றி ஆனால் இதுதன்னிறைவு அல்ல. முடியுமான அளவிற்கு எமது சொந்தக் காலில் நிற்றல் ஆகும். இதன் மூலம் பெறப்பட்ட பொருண்மியம் உறுதியானதாக இருக்கும் என தெரிவித்தார். இறுதியாக நன்றியுரையை இணுவையூர் சிதம்பரத்திருச்செந்திநாதன் நிகழ்த்தினார்.

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

16-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 251

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-5482, 43-0916, 26-9626, 41-9855, 28-6640
43-4170, 26-0832, 24-0417, 24-5454, 24-4875
24-5734, 26-0512, 28-6853, 26-8746, 26-2745
24-5241, 24-2288, 26-6077, 27-4673, 26-8075
41-4176, 24-9490, 26-1989, 26-7252, 24-6541

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-2317, 28-8951, 26-5244, 26-4727, 28-5484
27-5823, 26-3528, 41-4154, 26-2366, 28-1686
26-3130, 24-9830, 27-7263, 26-1690, 41-9746
24-6475, 24-8197, 24-7087, 24-6811, 27-0922

ROTARACT CLUB

யாழ். மிட் - ரவுண் றோற்ரறக்ற் கழகம்

நன்றி கூறுகின்றோம்

எமது இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு திருநெல்வேலியில் உள்ள முத்துத்தம்பி சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் வைத்திய பரிசோதனை செய்த றோட்டரிக் கழக வைத்தியர்களுக்கும், ஏனைய வைத்தியர்களுக்கும், மதியபோசனத்திற்கு வேண்டியவற்றை அன்பளிப்புச் செய்த வர்த்தக நிலையங்களான சோபனா புடவை மாளிகை, லிங்கம் சில்க் ஹவுஸ்,

### தளபதி

சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொது இடங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்ததுடன் மின் அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன.

வங்கக்கடலில் வேங்கைகள் பயணம் செய்த எம். வி அகத் கப்பலின் மாதிரியொன்றுவல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டிருந்தது. இதனை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் நாடாவைவெட்டி திறந்துவைத்தார்.

இந் நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட கடற்புலிகள் தளபதி ஈஸ்வரனும், கடற்புலிகள் கொடியை கடற்புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆதவனும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து எம். வி. அகத் மாதிரி கப்பலுக்குள் வைக்கப்பட்டிருந்த பத்து மாவீரர்களதும் உருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர், உறவினர்களும், போராளிகளும் மலர்மாலை அணிவித்தனர். தளபதி கேணல் கிட்டுவின் உருவப்படத்திற்கு அவரது தாயார் திருமதி இராசலட்சுமியும், லெப். கேணல் குட்டிசிறியின் உருவப்படத்திற்கு விடுதலைப்புலிகளைச் சேர்ந்த சங்கர் அண்ணாவும், மேஜர் வேலன் உருவப் …திற்கு அவரது தந்தை

## நினைவு மண்டப திறப்பு விழா

தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் ஓராண்டு நிறைவினை முன்னிட்டு நினைவு மண்டபத் திறப்பு விழாவும், அஞ்சலி நிகழ்வும்இன்றுகாலைதமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மௌனஞ்சலி, நினைவு மண்டபம் திறந்து வைத்தல், ஈகைச் சுடரேற்றல், நினைவுரைகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியில் மாவட்ட மட்டப் போட்டிகளில் இன்று மாலை 3.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில், பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம்மோதும்.

## ராஜீவை தாக்கிய சிப்பாய் தேர்தலில் போட்டி

(கொழும்பு)

இலங்கையில்வைத்து முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திமீது தாக்குதல் நடாத்திய கடற்படைச் சிப்பாய் தென் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் கொழும்பில் நடைபெற்ற அணிவகுப்பின் போது ராஜீவ்காந்திமீது தாக்குதல் நடாத்திய சிப்பாயான விஜித்தறோகண விஜிமுனி என்பவரே மேற்படி தேர்தலில் போட்டியிடஉள்ளார்.

சிங்கள மகாசம்பத்தபூமி புத்திர இயக்கம், சிங்கள மகாசபை, சிங்கள கெமுனு முன்னணி ஆகியவை இணைந்து தென் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட உள்ளன. இக் கூட்டு முன்னணியின் வேட்பாளராகவே இவர் போட்டியிடவுள்ளார்.

### கிட்டுவால்

ஈடுபட்டிருந்தது இந்தியாவிற்கு நன்கு தெரியும். இந்தத் தீர்வு இலங்கையில் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் தமிழ் மக்கள் ஒரு நிரந்தர நிம்மதியை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவும் இந்தியா கேணல் கிட்டு வந்த கப்பலை வழி மறித்தது. ஐரோப்பிய நாடுகள் இந்த விடயத்தை நன்றாகத் தெரிந்திருந்தும் இந்தியாவின் அழுத்தத்தினாலும் அதனை பகைக்க விரும்பாமலுமே மௌனம் சாதித்தன.

கேணல் கிட்டு அவர்களின் சமாதானத் தீர்வோடு எமது தன்மான உணர்வையும் அவர் வெளிக்காட்டினார். அனைத்துலகிற்கும் தமிழர்களின் வீரத்தையும் விடுதலைப் புலிகளின் தியாகத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தனியொரு மனிதனாக நின்று சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் மனவுறுதியையும் போராளிகளின் அர்ப்பணிப்புகளையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். எம்மையெவரும் அடிமை கொள்ள முடியாது என்ற ஓர் உறுதியான செயற்பாட்டை தெளிவாக்கியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்புகின்றார்கள். ஒரு நிரந்தர அமைதியை விரும்புகின்றார்கள். தமிழீழ மக்கள் ஓர் நிரந்தர சமாதானத்துடன் வாழ விரும்புகின்றனர் என்பது சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச உலகிற்கும் நன்கு தெரியும். ஆனால் சிறிலங்கா அரசு புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை. அரசு பேச்சுவார்த்தையை நடாத்தத் தயாராகவுள்ளது. சமாதானத்தை நிலைநாட்ட விரும்புகிறது. ஆனால் விடுதலைப் புலிகள் போரையே விரும்புகிறார்கள். சமாதானத்தை விரும்பவில்லை என கீழ்த்தரமான ஓர் பிரசாரத்தையே உலக நாடுகளிடையே செய்துகொண்டிருக்கிறார்கள்.

எமதுதமிழீழதேசியத் தலைவர் அவர்கள் அண்மையில் மாவீரர் நாள் செய்தியில் கூட இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் இவ்வளவு அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் இராணுவ இழப்புகளுக்கு மத்தியிலும் விடுதலைப்

### பத்தாண்டு

விடுத்த அழைப்பை புலிகள் ஏற்றுக்கொள்வது சந்தேகமே. பேச்சுக்கள் நடத்துவதற்கான முதல்படி போர் நிறுத்தம் என புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். இவ்வாறு பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இரு தரப்புமே தற்போது தமது நிலையை கடுமைப்படு

### எமது

டத்தை இல்லாமல் ஒழிக்க இந்தியா பல வருட காலமாக முயன்று வருகிறது. சில சம்பவங்கள் இதைக் காட்டுகின்றன.

நாம் இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிராகவும் இனவாத சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராகவும் போராட்டத்தை நடத்தி வருகிறோம்.

ஆயுதங்களை எதிரிகளிடமிருந்து பெறுகிறோம். ஆனால் போராளிகளை எங்களிலிருந்துதான் பெறவேண்டும், இதை மக்கள் உணர வேண்டும்.

பிரபாகரனின் காலத்தில் நாம் சுதந்திரம், விடுதலை பெறவில்லை என்றால், இனி எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் இவற்றை பெற முடியாது என்றார்.

வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ அங்கு பேசும் போது, எமது போராட்டத்தை யாரிடமும் கொடுத்துவிட முடியாது. நாம் எம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

நாம் தொடர்ந்து போராடுவோம். சுதந்திர தாயகம் பெறுவோம் என்ற நம்பிக்கையில்தான் ஆயிரக்கணக்கான போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். பல தளபதிகள் எம்மில் வைத்துள்ள நம்பிக்கையில்தான் வீரச்சாவடைந்துள்ளனர் என்றார்.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி. தணிகைச் செல்வி பேசும் போது, நாம் எமது போராட்டத்திற்காக நல்ல தலைமையைப் பெற்றிருக்கிறோம்

இந்தகாலகட்டத்தில்உறுதி எடுத்துக் கொள்வோம்.எமது போராட்டத்தை அடுத்த சந்ததியிடம் ஒப்படைக்காமல் நாமே நடத்தி முடிப்போம் என்றார்.

திரு. அரசண்ணா அங்கு பேசும் போது, கேணல் கிட்டு, தமிழ் மக்களின் தன்மானத்துடன் தன்னைபிணைத்துள்ளான். தளபதி கிட்டு இந்திய வல்லாதிக்கத்திடம் தலை குனிந்திருந்தால் தமிழனுக்கிருக்கின்றதனிக்குணம் இல்லாமல் போய்விட்டது என்ற எண்ணம் உருவாகியிருக்கும்.

தளபதி கிட்டுவின் இழப்பு வேதனைதான் ஆனால்,நெஞ்சும், தலையும் நிமிர்ந்து நிற்கின்றன.

இந்தியாவால் சதிவலையில் அகப்பட்ட பத்துப் புலிகளைக் கூட பிடிக்க முடியவில்லை: பிரபாகரன் என்ற வரலாற்று நாயகனையா பிடிக்க முடியும்? என்று கேள்வி எழுப்பினர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில், விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு. தேவர் அண்ணா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மகளிர்

### புகைக்கூண்டு

வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு உட்படபத்து வேங்கைகள் நினைவாக மிகப் பிரமாண்டமான புகைக் கூண்டு ஒன்று வானிலே மிதக்கவிடப்பட்டது.

வல்வெட்டித் துறையில் நேற்று நடைபெற்றமுதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வின் போது மின்குமிழ் வடிவிலான சுமார் இருபது அடி உயரம் பதினைந்து அடி சுற்றளவும் கொண்ட இப் புகைக் கூண்டுஒளிவீசியவாறு வானில்மிதக்கவிடப்பட்டது.

இதன் வெளிப்புறங்களிலே கேணல் கிட்டு என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது. பெருமளவு மக்கள் இதனை குழுமி நின்று பார்வையிட்டனர்.

### அரசுக்கு

றியை நோக்கி மக்களை வழி நடத்துகின்ற இந்த தளபதிகளுடைய எண்ணங்களை, உணர்வுகளை தமிழீழ மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தளபதிகளும் என்ன நடந்தாலும் தமது லட்சியத்தை விடுவதில்லை என்ற உறுதியோடு வித்தியாசமான சாவுகளைச் சந்தித்து இந்தப் போராட்டத்திற்கு பெரும் பலம் சேர்த்ததை எமது தமிழீழ வரலாறு காட்டுகிறது.

அதேபோல்தான் கேணல் கிட்டண்ணாவும் இந்தியச் சதியை உலக அரங்கிற்குப் புலப்படுத்தும் முகமாக விடுதலைப் புலிகளின் மரபிற்கிணங்க வீரச்சாவைத் தழுவினார்.

எமது தேசிய எழுச்சியை எந்தவொரு அன்னிய ஆதிக்கத்திற்கும் நாம் அடைவு வைக்கக்கூடாது. எமது தேசிய வளத்தை கட்டியெழுப்பவேண்டும். எமது விடுதலைப் போராட்ட வரலாறு, சாதனைகள் அனைத்தும் நாம் எந்தவொரு சக்தியையும் வென்றெடுக்கக்கூடிய பலத்தை பெற்றிருக்கின்றோம். அனைத்து சதிகளையும் முறியடிக்கக்கூடிய சிறந்த தலைமையை பெற்றிருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டு நாம் அனைவரும் அணிதிரண்டு எமது படை பலத்தை பெருக்கி தேசிய விடுதலையை நாமே அமைக்கவேண்டும்.

இந்தியா எமது விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து துரோகம் இழைத்து வருகின்றது. இந்த துரோகம் இன்றுவரை தொடர்வதை அறிவீர்கள்.

இந்த சதிகளை முறியடிக்க நாம் எமது சொந்த பலத்தில் நிற்கவேண்டும் அவ்வாறு சொந்தக்காலில், சொந்த பலத்தில் நிற்பதன்மூலமே எந்தவொரு சதியையும் முறியடிக்கமுடியும் என்றார்.

தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம்


அன்பளிப்புச் செய்த வர்த்தக நிலையங்களான சோபனா புடவை மாளிகை, லிங்கம் சில்க் ஹவுஸ், வீனர் வர்த்தகக் களஞ்சியம் ஆகியவற்றிற்கும் அங்குள்ள சிறுவர்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களைத் தந்துதவிய வர்த்தக நிலையங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் யாழ். மிட்-ரவுண் றோற்ரறக்ற் கழகத்தினர் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

விளம்பர அன்பளிப்பு;

(7250) **கிறீன் சியஸ் ரெயிலறிங்**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:

31 - 5 - 1907

மறைவு:

18 - 12 - 1993

## அமரர் கணபதிப்பிள்ளை முதலித்தம்பி

(அப்பர்)

திதி: 17 - 1 - 1994

அன்பான தந்தையே! பாசமிகு பிதாவே!
ஆலமரம் போல நிழல் தந்தீரே.
காலனுமைக் கவர்ந்து சென்றானே:
கலங்குகின்றோம் உமது பிரிவால்
மண்ணில் மாண்டார் மீள்வதில்லை.
விநாயகனை வேண்டுகிறோம்.
உமது ஆத்ம சாந்திக்கு!

இங்ஙனம்.
மக்கள், மருமக்கள்,
(7251) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

சேர்ந்த சங்கர் அ... மேஜர் வேலன் உருவப் படத்திற்கு அவரது தந்தையாரும் மற்றும், மாவீரர்களுக்கு அவர்களது பெற்றோரும் மலர்மாலை அணிவித்தனர். யாழ். மாவட்ட அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் இளையவன் ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் தளபதி கேணல் கிட்டுவின் 40 அடி உயரமான உருவப்படத்தைக் கொண்ட நினைவுச் சதுக்கம் திறந்து வைக்கப்பட்டது. இதனை கடற்புலிகளின் தளபதி கங்கை அமரன் திறந்துவைத்தார். தளபதி கேணல் கிட்டுவின் உருவப்படத்தை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை திரைநீக்கம் செய்து வைத்தார். கேணல் கிட்டுவின் உருவப்படத்திற்கு திருமதி நித்தியா - கிட்டு மலர்மாலை அணிவித்தார். இதன் ஈகைச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து இவரது படத்திற்கு மக்கள் மலர் தூவி காணிக்கை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து வல்வை அம்மன் ஆலய வீதியில் இரவு 7 மணிக்கு வேங்கைகள் நினைவாக கூட்டம் ஆரம்பமானது. மக்கள் தொடர்பாளர் திரு. மறவன் தலைமையில் அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு, பொன் தியாகம், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி சுடரவள் கடற்புலிகள் அரசியல் நிர்வாக பொறுப்பாளர் மூர்த்திஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (யோ)

இரு தரப்புமே தற்போது தமது நிலையை கடுமைப்படுத்தி வருகின்றனர். நவம்பரில் பூநகரியில் பல படையினர் பலியானது தெற்கில் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் வடக்கில் நடக்கும் இராணுவ தாக்குதல்களும் விமானத் தாக்குதல்களும் புலிகளுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது என்றார்.

---

## புலிகளைப்

நடைபெற்றபின்னர் இரண்டாம் கட்டமாக வெளிப்படையில் பேசுவதற்காக ரணில் விக்கிரமசிங்கா இப்படியான அழைப்பை விடுத்துள்ளாரா என்பது சந்தேகப்படக்கூடிய விடயம்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே பரஸ்பரம்சந்தேகம் உள்ளது. இந் நிலையில் இவ் அழைப்பின்மூலம் பேச்சுவார்த்தை எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமாகும் என்பதைப் பொறுத்திருந்துதான்பார்க்க வேண்டும்.

எந்த மனநிலையில் இப்படிக் கூறினாரோ தெரியாது. எது எப்படியிருப்பினும் விடுதலைப்புலிகளுக்கு விடுத்த அழைப்பு அரசு தனது நிலையிலிருந்து ஒருபடியிறங்கி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றால் அது மக்களுக்கு நன்மையாக அமையும் என்றார்.

---

## இந்திய

குழு கூட்டங்கள் ஆண்டுதோறும் நடப்பவை இரு நாடுகளினதும் வெளி நாட்டமைச்சர்கள் சந்தித்து உபகுழுக்கள் குறித்து ஆராயவே இது நடத்தப்படுகிறது. இந்திய அரசின் வேண்டுகோளிற்கு இணங்க இவ்வருட கூட்டத்திற்கான திகதிகள் பின்போடப்பட்டுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் இராணுவ இழப்புகளுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் சமாதானக்கதவை மூடிவிடவில்லை. இன்னும் திறந்தே வைத்திருக்கிறோம் என தெட்டத்தெளிவாக கூறியுள்ளார்.

இந்த நிலையில் சிறிலங்கா அரசு எம்மீது அழுத்தங்களை தொடர்ந்து பிரயோகிப்பதற்காக பல நிபந்தனைகளை விதிக்கின்றது புலிகளுடன் பேசுவதானால் ஆயுதங்களை கீழேபோட்டுவிட்டும் தமிழீழ கோரிக்கையை கைவிட்டுவிட்டும் பேச்சுக்கு வரவேண்டும். தலைவர் பிரபாகரன் கொழும்புக்கு வந்து எம்முடன் பேசவேண்டும் என்று நிபந்தனைகளை விதிக்கின்றனர். எமது விடுதலைப் போராட்ட மரபிற்கு ஒத்துவராத இந் நிபந்தனைகளை சிறிலங்கா அரசு விதிக்கின்றதென்றால் நிரந்தர சமாதானம், அமைதி தமிழீழ மக்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலே அது உறுதியாகவுள்ளதை புரிந்துகொள்ளலாம்.

கொழும்பிலுள்ள சிங்களப் பேரினவாதிகள் தமிழீழ மக்களை ஆக்கிரமிப்பதற்கும், அழிப்பதற்கும் முனைந்து நிற்கின்றனர். மிகப் பெரியளவிலான படைஎடுப்பை மக்கள் மீது நடாத்த திட்டமிட்டு வருகின்றனர் இராணுவரீதியிலான தீர்வையே அரசு விரும்புகிறது என்பதற்கு இந் நிபந்தனைகள் சான்றாகின்றன. ஒரு மிகப்பெரும் இராணுவ நடவடிக்கைமூலம் எமது பிரதேசத்தை கபளீகரம் செய்ய திட்டங்களை தீட்டிவருகின்றனர்: 1994ஆம் ஆண்டை ஓர் யுத்த ஆண்டாக பிரகடனப் படுத்தவுள்ளனர்.

விடுதலைப்புலிகள் போராட்ட வரலாற்றிலே பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர். பல யுத்த களங்களைக்கண்டு பல அரிய சாதனைகளையும், வெற்றிகளை

...னர் திரு. தேவா அ... அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மகளிர் அமைப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி. ரதி அவர்கள் ஈகைச்சுடர் ஏற்றி வைத்தார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்கள், தளபதி கேணல் கிட்டுவினது உருவப்படத்தையும் ஏனைய ஒன்பது மாவீரர்களினதும் உருவப்படங்களையும் திரை நீக்கம் செய்து வைத்து கேணல் கிட்டுவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தார்.

கூட்டத்தின் இறுதியில் இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (தி)

---

யும் ஈட்டியுள்ளனர். இந்த வெற்றிகள் நிரந்தரமாக்கப்படல்வேண்டும், எமது பிரதேசங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். இன்று கடற்புலிகள்கூட சிங்கள கடற்படைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகவுள்ளனர். இந்த பரந்த கடற்பிரதேசத்திலே கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதல்களும், அர்ப்பணிப்புகளும், தியாகங்களும் சிறிலங்கா கடற்படையை திணறடித்துள்ளது இந்த ஆத்திரத்தில் கடலில் நின்றுகொண்டு அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்கின்றது இந்த நிலையை நீடிக்கவிடக்கூடாது. நாங்கள் இந்தப் படைகளை எதிர்த்து எமது மக்களை பாதுகாக்க நாம் துணியவேண்டும். வீட்டுக்கொருவர் போராட்டத்தில் இணைவதன்மூலமே எமது பிரதேசத்தை நிரந்தரமாக பாதுகாக்க எமக்கென்று ஓர் பலத்தைநாம் உருவாக்க வேண்டும். இனமும்சிறிலங்கா அரசின் விமானத் தாக்குதலால் ஏற்படும் அழிவுகளை நிறுத்த வேண்டுமாயின் நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக திரண்டு இராணுவத்திற்கு

தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள்உரையாற்றுகையில்,

மண்ணின் விடிவிற்காக மக்களின் எதிர்கால சுபீட்சத்திற்காக விடுதலைப் புலிகள் போராடி வீரச்சாவைத் தழுவுகின்றனர். இவ்வாறு போராளிகளின் வீரச்சாவுகளால் எமது போராட்டம் உத்வேகம் அடைகிறது. இதைக்கண்டு எதிரிகள் கதிகலங்கிநிற்கின்றனர் என்றார்

கடற்புலிகள் தமிழீழ அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி உரை நிகழ்த்துகையில்,

எமது மண்ணின் விடுதலைக்கு சரியான, திறமையான, உறுதியான, தூய்மையான தலைவரைப் பெற்றிருக்கிறோம் அந்தத் தலைவனின் வழியிலே அவரது எண்ணங்கள், செயற்பாடுகள், கருத்துக்கள் அனைத்தையும் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றை நடைமுறைப் படுத்துவதில் திரு. கிட்டு அண்ணா அவர்கள் முன்னணியில் இருந்தார்.

பொதுமக்களின் துன்பங்களைக் கண்டுஎம்மிடம்உள்ள வளத்தைக் கொண்டு பொது மக்கள் ஓர் சிறப்பானவாழ்வு வாழ வழி சமைக்க வேண்டும் என கூறி அதற்கு செயல் வடிவமும் கொடுத்தார். அத்துடன் மக்களை திரட்டி போராட்டத்தை விரைவு படுத்துவதிலும் ஓர் வழிகாட்டியாகவே இருந்தார்.

இவர் தனது கருத்தை. எண்ணத்தை எமது தலைவனின் வழிநடத்தலின் கீழ் இங்கு நெறிப்படுத்தி செயல் முறைப்படுத்திய ஒரு செயல் வீரனாகவே திகழ்ந்தார் என்றார்.

---

எதிராக மிகப்பெரும் தாக்குதலை நடாத்த தயாராக வேண்டும் என்றார்.